

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (23–06–2026) மாலை, ஆழ்வார்பேட்டையில் உள்ள அவரது இல்லத்தில், SRMU பொதுச் செயலாளரும் – அகில இந்திய ரயில்வே சம்மேளனத்தின் தலைவருமான கண்ணையா அவர்கள் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் தலைமையில் மாணவரணி பகுதி துணை அமைப்பாளர் பா.சக்திதாசன் ஏற்பாட்டில் 1003 பேருக்கு நலத்திட்ட உதவிகளை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் வழங்கினார். இதில் தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அணிச் செயலாளர் டாக்டர் சுபேர்கான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி, இளைய அருணா, மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் பி.எம். யாழினி, மாவட்ட மகளிர் அணி தலைவர் வேளாங்கன்னி உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

## முதல்வரின்

# சவுண்ட் - ஆக்க்ஷன் - டயலாக்!

ரசிகர்களை வெறியூட்டுவதற்கும் உசுப்பேற்றுவதற்கும் தயாரிக்கப்பட்ட பேச்சுகளை பேசி பழக்கப்பட்டவர் விஜய். இப்போது முதல்வர் பதவிக்கு வந்த பிறகும் அதைத் தவிர வேறு எந்த பேச்சையும் அவரால் பேச முடியவில்லை. எனவே தான் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் அவையை விட்டு வெளியேற்றிவிட வேண்டும் என்பது அவரது முதல் பிரச்சினையாக இருந்தது.

அதற்காகவே வசைச் சொற்களை வீசினார் ; எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்த பிறகு தான் அவருக்கு நிம்மதியும் மகிழ்ச்சியும் கிடைத்தது அப்பாடா; இனி ஸ்கிரிப்ட்டை ரசிகர்களிடம் பேசுவது போல் பேசலாம் என்ற நிம்மதி பெருமூச்சு அவருக்கு வந்திருக்கிறது. எதிரே அமர்ந்திருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் ரசிகர்கள் அல்ல! அவர்கள் முதல்வர் விஜயின் பேச்சுக்கு விசில் அடித்து கைதட்டி ஆரவாரம் செய்ய சட்டமன்றத்திற்கு வரவில்லை என்பதை அவருக்கு பேச்சு தயாரித்து கொடுத்தவர்கள் உணர்ந்திருக்க வேண்டும்.

**விஜய் வருகைக்கு முன் தங்கள் அலுவலகத்துக்கு சோபா வந்தது என்பதை சில தலைவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் ;இதற்கு முதல்வர் விஜய்யிடம் இருந்து ஏன் திட்டவட்டமான மறுப்பு வரவில்லை? பூசி மெழுகி அதை கடந்து செல்வதற்கு இவர் ஏன் முயற்சிக்கிறார்?**

தமிழ்நாடு அரசு நிகழ்ச்சிகளில் “தமிழ்த்தாய் வாழ்த்து” பாடி தொடங்கும் மரபு தமிழ் நாட்டில் நீடிக்கிறது. “தமிழ்த்தாய் வாழ்த்து” தான் தமிழ்நாடு அரசின் பாடல் என்று திராவிட மாடல் ஆட்சி நடத்திய மு.க.ஸ்டாலின் அரசு ஆணையும் பிறப்பித்திருக்கிறார். அதேபோல் சட்டமன்ற நிகழ்வு தொடங்குவதற்கு முன்பும் “தமிழ்த் தாய் வாழ்த்து” தான் பாடப்பட்டு வந்தது இதில் “ஜன கன மன” தேசிய கீதத்தை ஏன் இணைக்க வேண்டும் ? “வந்தே மாதரம்” பாடலைப் போல் தமிழ் வாழ்த்துப் பாடலும் ஒரு விருப்ப தேர்வுதானே தவிர சட்டபூர்வ தமிழ்நாட்டுக்கான பாடல் அல்ல ; தேசிய கீதமே சட்டபூர்வமான பாடல் என்ற கருத்தியலை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கம்.

மாநில உரிமையை அடகு வைத்து விட்ட இந்தச் செயலை மறைப்பதற்கு ஒரு ஆதாரத்தை தேடித் தேடி கண்டுபிடித்து இருக்கிறார்கள். அதாவது சட்டமன்றத்தில் கலைஞர் படத்தை திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் பங்கேற்றபோது முதலில் தேசிய கீதமும் பிறகு தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடப் பெற்றது என்று முதலமைச்சர் விஜய் கூறுகிறார். இந்த ஓட்டைவாதம் மக்களிடம் எடுபடாது என்பதை தெரிந்து கொண்ட அவரே இதற்கான பதிலையும் கூறிவிட்டார் குடியரசுத் தலைவர் பங்கேற்ற நிகழ்ச்சி என்பதால் தேசிய கீதம் பாடி இருக்கலாம் என்று அவரே அதற்கு விளக்கமும் கூறியிருக்கிறார். பிறகு இதில் குற்றம் சாட்டுவதற்கு என்ன இருக்கிறது?

சொல்லப்போனால் இந்திய அரசியல் சட்டத்தின்படி இந்தியாவின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவர் பங்கேற்கும் நிகழ்ச்சியில் தொடக்கத்திலும் இறுதியிலும் தேசிய கீதம் மட்டுமே பாடப்பட வேண்டும் என்று இருந்த மரபை தமிழ்நாடு அப்படியே ஏற்காது ; தேசிய கீதத்தோடு தமிழ்த்தாய் வாழ்த்தையும் இணைத்து இங்கே பாட வேண்டும் என்று அதிலும் மாநில உரிமையை நிலைநாட்டி இருக்கிறார் தமிழின தலைவர் கலைஞர் .

இதற்கு நேர் மாறாக தமிழ்நாடு சட்டமன்ற மரபுகளை மாற்றி தமிழ்த்தாய் வாழ்த்து பாடலோடு தேசிய கீதத்தையும் கொண்டு வந்து இணைத்து தமிழ்நாட்டின் தனித்துவமான அடையாளத்தை சிதைத்து இருக்கிறார் முதல்வர் விஜய்.

**எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சட்டமன்றத்தில் நிகழ்த்திய உரையில் எடுத்து வைத்த எந்த குற்றச்சாட்டுக்கும் முதல்வரிடம் இருந்து பதில் வரவில்லை.மாறாக வசை மொழிகளை முதல்வர் என்ற தகுதியிலிருந்து கீழே இறங்கி வீசி இருக்கிறார்.**

எதிர்க்கட்சிகள் இல்லாத போது அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை பேசலாமா? என்று அவரே கேட்டுக் கொண்டு அதற்கு பேரவை தலைவர் அனுமதியையும் வாங்கிக்கொண்டு பிறகு தனது “ஜிக்கு புக்கு” வசனங்களில் நடிக்க ஆரம்பித்து விட்டார்.

பொதுவாக சட்டமன்ற உரைகளில் மேடைப் பேச்சு போல உரத்த குரலில் முதல்வர்கள் பேசுவதில்லை. ஆனால் எதிர்க்கட்சிகள் காதில் விழ வேண்டும் என்பதற்காக உரத்த குரலில் பேசுகிறேன் என்றும் அதற்கு பேரவைத் தலைவர் அனுமதிக்க வேண்டும் என்றும் உலக சட்டமன்ற வரலாற்றில் எந்த முதலமைச்சரும் கேட்காத ஒரு அனுமதியை முதல்வர் விஜய் கேட்டு அதற்கு பேரவைத் தலைவர் அனுமதியும் வழங்கிய ஒரு அதிசய காட்சியும் சட்டமன்றத்தில் நிகழ்ந்திருக்கிறது.

இத்துடன் கூடுதலான ஒரு கோரிக்கையையும் முதலமைச்சர் வைத்திருக்கலாம்; உரத்த குரலில் பேசும்போது அவையில் ஒலிபெருக்கிகளை அனைத்து விட வேண்டும் என்றும் கேட்டு இருக்கலாம்.

அதேபோல் உரையின் இறுதியில் தான் ஒரு **“ஆக்க்ஷன்”** நடிப்பு செய்யப் போவதாகவும் அதற்கு பேரவை தலைவர் அனுமதிக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார். உடனே பேரவைத் தலைவர் உங்கள் விருப்பப்படி எந்த **“ஆக்க்ஷனையும்”** செய்து கொள்ளுங்கள் என்றும் அனுமதி அளித்திருக்கிறார்.

முதல்வர் விஜய் நிகழ்த்திய அந்த ஆக்க்ஷன் என்ன தெரியுமா? கழுத்தை சீவுவது போல ஒரு ஆக்க்ஷன்! பின் வரிசையில் அமர்ந்திருந்த அவரது கட்சி உறுப்பினர்களும் இந்த அரியகாட்சியை கண்டு ரசிப்பதற்கு ஒரு டிஜிட்டல் திரையை ஏற்பாடு செய்திருக்கலாம்.

பேரவைத் தலைவர் இந்த ஆக்க்ஷனை சபை குறிப்பேட்டில் எப்படி பதிவு செய்யப் போகிறார் என்பது தெரியவில்லை! ஆனால் தமிழ்நாட்டு மக்கள் தொலைக்காட்சியில் இந்த இந்த ஆக்ஷனை நேரில் பார்த்திருக்கிறார்கள்.

**தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு இப்படி ஒரு முதலமைச்சரா என்று தலைகுனிய வைத்து விட்டது முதல்வரின்**

**“சவுண்ட் - ஆக்க்ஷன் - டயலாக்”**



**விடுதலை ராஜேந்திரன்**
திராவிடர் விடுதலைக் கழக பொதுச் செயலாளர்

## த.வெ.க.வினரின் உருட்டல் மிரட்டல்களுக்கு எல்லாம் பயப்பட மாட்டோம்!

# நெருக்கடி காலத்திற்கே அஞ்சாத இயக்கம் தி.மு.க.!

## முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!



**சென்னை, ஜூன் 25–**

**‘தி.மு.க. நெருக்கடி காலத்திற்கே அஞ்சாத இயக்கம். எங்கள் மடியில் கனமில்லை. வழியிலே பயமில்லை. ஆளும் த.வெ.க. அரசின் உருட்டல் மிரட்டல்களுக்கெல்லாம் பயப்பட மாட்டோம்’ என ஊட்டியில் ‘கோவில் மல்டி லெவல் கார் பார்க்கிங்’ பற்றிய செய்தியாளர்களின் கேள்விக்கு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.**

*அவரது பேட்டி வருமாறு:-*

*ஊட்டியில் அமைந்திருக்கின்ற 52 திருக்கோயில்களுக்கும் நான் ஐந்து நாட்கள் முழுமையாக ஆய்வினை மேற்கொண்டேன். அந்த இடம், பத்தாயிரம் சதுரடி பரப்பளவு கொண்ட, அந்த விநாயகர் கோயிலுக்குச் சொந்தமான இடம். அந்த இடத்தில் ஏற்கனவே நகராட்சியும் ‘மல்டி லெவல் கார் பார்க்கிங்’ கட்டுவதற்குத் தேவை இருக்கிறது என்று கூறியிருந்தது.*

*இந்த வகையில் நாம் அந்த இடத்தை ஆய்வு செய்து, அன்றைய சட்டப் பேரவை உறுப்பினராகவும் அந்த மாவட்டத்தினுடைய அமைச்சராகவும் இருந்த அருமை அண்ணன் ராமச்சந்திரன் அவர்கள் கோரிக்கை வைத்ததற்கிணங்க, இதைப் பரிசீலித்து, இக்கோயிலுக்குத் தேவைப்படுகின்ற நிதியை மருதமலை திருக்கோயிலிலிருந்து கடனாகப் பெறுவதற்கு, அவர்களுக்கு இந்தத் திருக்கோயிலுடைய செயற்பொறியாளர் ஒரு தாக்கீது அனுப்பி, அதன் அடிப்படையில் அந்தத் திருக்கோயிலில் இருக்கின்ற துணை ஆணையர் அவர்கள் பரிந்துரைத்து, அது இணை ஆணையர் வாயிலாக ஆணையருக்குச் சென்று, அன்றைக்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டது.*

*அந்தத் திருக்கோயிலுடைய நிதியைப் பயன்படுத்துவதற்கு, அந்த மருதமலைத் திருக்கோயில் அறங்காவலர்கள் அன்றைக்குச் சம்மதம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றார்கள். இதில் எங்கு, என்ன தவறு நடந்தது என்று அவர் நேற்றுச் சொன்னார் என்றே தெரியவில்லை.*

*நிச்சயமாகச் சொல்கிறேன்... வணிகரீதியானது என்பது அந்தத் திருக்கோயிலுக்குத் தேவையான வருமானங்களை ஈட்டுகின்ற ஒரு முயற்சியாகும். குன்னூர் என்பது சுற்றுலாப் பகுதி; தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்ற பகுதி. அந்தப் பகுதியிலே வாகனங்கள் நிற்பதற்குக்கூட இடங்கள் இல்லாத ஒரு சூழல்; பெரிய கடையின் முன்புகூட ஒரு இருசக்கர வாகனத்தைக் கூட நிறுத்த அனுமதிக்க முடியாத ஒரு சூழல். திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்கள் பயன்பாட்டிற்கு மாத்திரமல்லாமல், அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுடைய பயன்பாட்டிற்கும் அந்த ‘மல்டி லெவல் கார் பார்க்கிங்’ கட்டிக் கொடுக்கப்பட்டால், அதில் நிர்ணயிக்கப்படுகின்ற அந்தக் கட்டணத்தை வைத்து, ஊட்டியில் நலிவடைந்த நிலையில் உள்ள 52 திருக்கோயில்களின் அடிப்படைத் தேவைகளுக்கு, அதில் வருகின்ற வருவாயை முழுமையாகப் பயன்படுத்த முடியும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் கடந்த திராவிட மாடல் ஆட்சியில் தொடங்கப்பட்டது.*

*அதை முழுமையாக உணராமல், புரியாமல் ஒரு அமைச்சர் அவசர கதியில் பேசுகிறார். எனவே, இந்தப் பேட்டியைப் பார்த்த பிறகாவது, அந்தத் திட்டம் ஏன் கொண்டு வரப்பட்டது, அந்தத் திட்டம் ஏன் செயல்படுத்துவதற்கு முயற்சிக்கப்பட்டது என்ற உண்மை நிலையை அவர் உணர வேண்டும். இதுவரையில் அந்தத் திட்டத்திற்கு உண்டான அனுமதி ரத்து செய்யப்படவில்லை என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.*

**‘மல்டிலெவல் கார் பார்க்கிங்’**

*பத்திரிகையாளர்: அமைச்சர் குறிப்பாகச் சொல்லும்போது, 500 பேர் கூட வராத ஒரு இடத்திற்கு எதற்கு ‘மல்டி லெவல் கார் பார்க்கிங்’ என்று கேட்கிறார்?*

*500 பேர் கோயிலுக்கு வருவதற்காக மட்டுமல்ல; ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள், ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள், லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் விடுமுறைக் காலங்களிலும், கோடைக் காலங்களிலும் சுற்றுலாப் பயணிகளாக வருபவர்களுக்காகத் தான் அந்த கார் பார்க்கிங் ஏற்படுத்தப்பட்டதே தவிர, வெறும் திருக்கோயிலுக்கு வருபவர்களின் பயன்பாட்டிற்கு மாத்திரம் ஏற்படுத்தப்படவில்லை.*

*அதோடு, நலிவடைந்த திருக்கோயில்களுடைய நிலையை மேம்படுத்துவதற்காகவும், வருகின்ற பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு உண்டான வருவாயை உயர்த்துவதற்காகவும் தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அறிவு சார்ந்த அனைவரும் இதை வரவேற்பார்கள்.*

*பத்திரிகையாளர்: சட்டசபையில் விளக்கம் கொடுப்பதற்கே இடமளிக்காதது குறித்து?*

*நிச்சயமாக... சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில், நீங்கள் அறியாதது ஒன்றுமில்லை; தெரியாதது ஒன்றுமில்லை. முழு விளக்கம் கிடைக்கும் அல்லது அமைச்சர்கள் கூறிய கருத்திற்கு எதிர்கருத்து வாதம் சரியாக இருக்கும் என்றால், எப்போதுமே அனுமதி தர மாட்டார்கள், அனுமதி மறுப்பார்கள். அதுதான் நேற்றைக்கு முழுமையாக அனுமதி மறுக்கப்பட்டது.*

**நாங்கள் அடிக்க அடிக்க உயர்கிற பந்து**

*பத்திரிகையாளர்: மக்கள் பணத்தை ஒரு பைசா கூட தொட மாட்டோம்; தொட்டவர்களையும் சும்மா விட மாட்டோம்... ஊழலை வெளிப்படுத்தப் போகிறோம். குறித்து?*

*கொஞ்சம் நாள் பொறுத்த பிறகு இதையெல்லாம் சந்திக்கலாம் என்று இருந்தோம். இது நெருக்கடி காலத்திற்கே அஞ்சாத இயக்கம்; இது போன்ற உருட்டல், மிரட்டல்களுக்கெல்லாம் பயப்படுவோமா! மடியிலே கனமில்லை, வழியிலே பயமில்லை. ஏதாவது அவர்களிடம் குற்றங்கள் ஆதாரபூர்வமாக இருந்தால், நிச்சயமாக அதன் மீது அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தாலும் சட்டப்படி சந்திக்கத் தயாராக இருக்கின்றோம். இன்னும் அடிக்க அடிக்க உயர்கின்ற பந்தாகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் மேலும் மேலும் எழுந்து, நிமிர்ந்து, திமிறி நிற்கும். இது போன்ற உருட்டல், மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சுகின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல.*

**பதிலடி**

*பத்திரிகையாளர்: சட்டசபையில் முதலமைச்சர் பேசும்போது, ஒரு ‘சைகை’ ஒன்று காண்பித்தார். ‘அப்பாவைக் காணோம்’ என்று ஒரு குட்டிக் கதை சொன்னார். குறித்து?*

*அதற்குத் தகுந்த பதிலடியை, எங்களுடைய முன்னாள் துணை முதல்வர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவரும் ஆளுமையோடு அனைத்தையும் பதிவு செய்திருக்கின்றார். அவர் பேசுவதற்கு உண்டான வாய்ப்பை முழுமையாக நல்கியிருந்தால், நிச்சயமாக அங்கேயே பேசியிருப்பார்; அங்கேயே அதற்குத் தகுந்த பதிலடி தந்திருப்பார். எனவே, நானும் ஐந்தாவது முறையாகச் சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றேன். சட்டமன்றத்தில் ஜனநாயக முறைப்படி கடந்த காலங்களில் பல்வேறு முதலமைச்சர்கள் பேசுகின்ற பொழுது, எதிர்க்கட்சித் தலைவரின் குறுக்கீட்டை எல்லாச் சபாநாயகர்களும் அனுமதிப்பார்கள். அதேபோல் எதிர்க்கட்சியினரின் குறுக்கீடுகளை முதலமைச்சர்களும் ஏற்றுக் கொண்டு, அவருடைய குறுக்கீடுகளைக் கேட்டு அதற்கு விளக்கம் அளிப்பார்கள்.*


*ஏன், கடந்த காலங்களில் ஜனநாயகத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக இருந்த எங்கள் திராவிட மாடல் ஆட்சியின் தலைவர், எதிர்க்கட்சியினுடைய துணைத்தலைவர், கொறடா போன்றவர்கள் கூட முதலமைச்சர்கள் பேசுகின்ற பொழுது எழுந்து குறுக்கீடு செய்தால், அனுமதித்து அதற்குப் பதிலளிப்பார். ஆனால், இவர் தயாரித்து வந்ததைத் தவிர வேறு எதையும் பேசுகிற நிலை இல்லாததால், சபாநாயகர் அதற்கு அனுமதி அளிக்கவில்லை; அனுமதி மறுத்தார்.*

*இவ்வாறு பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.*

## ஆலந்தூர் தெற்கு பகுதி, 164வது

# வட்டச் செயலாளர் டி.ஏசு (எ) ஏசுதாஸ் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



*சென்னை, ஜூன் 25- காஞ்சி வடக்கு மாவட்டம், ஆலந்தூர் தெற்கு பகுதி, 164 வது வட்ட கழக செயலாளர் டி. ஏசு (எ) ஏசுதாஸ் நேற்று முன்தினம் (23.6.2026 - செவ்வாய்க்கிழமை) காலை 6 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். செய்தி அறிந்து கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.*

*அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (24.6. 2026-புதன்கிழமை) பிற்பகல் 2/30 நேரு காலனி மெயின் ரோட்டில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்து இறுதி ஊர்வலம் புறப்பட்டு பக்தவச்சலம் நகர் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.*

## ஆலந்தூர் 164 வது வட்டச் செயலாளர்

# ஏசுதாஸ் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 25 -

ஆலந்தூர் தெற்கு பகுதி 164 வது வட்டக் கழக செயலாளர் ஏசுதாஸ் நேற்று முன்தினம் காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.